நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஜீன் திங்கள் 4 ம் நாள் வியாழக்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.774/2026
CNR.No.TNTS02-0002196-2026
IN
குற்ற எண்.197/2026

தங்கம்,
த.பெ.மாரியப்பன் ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
கடையநல்லூர் கா.நி.கு.எண்.197/2026 ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.கணேசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

மனுதாரர்/எதிரிக்கு பிரிவு 480 BNS ன் கீழ் பிணை வழங்க வேண்டி 2 வது பிணை மனு தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்** :–

மனுதாரருக்கு எதிராக U/s.305(a), 331(3) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 17.05.2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரர் எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும், மனுதாரர் தலைமறைவாக மாட்டார் என்றும், மனுதாரர் ஜாமீன்தாரர்களை முன்னிருத்த தயாராக இருக்கிறார் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்** :–

இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், பி.ஆர்.எண். பெறவேண்டி உள்ளது என்றும், மேலும் எதிரி மீண்டும் இதே போன்று குற்ற செயல் செய்துள்ளார் என்றும், மீண்டும் செய்யக்கூடும் என்றும், எதிரிக்கு முன் வழக்கு உள்ளது என்றும், பிணை வழங்கினால் தலைமறைவாகிவிடுவார் என்றும்,

இதனால வழக்கு விசாரணை பாதிப்பு ஏற்படும் என்றும், எனவே எதிரிக்கு பிணை வழங்க கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தீர்வு** :-

4. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, மனுதாரர் மீது U/s.305(a), 331(3) BNS வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/எதிரி கடந்த 17.05.2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பது தெரியவருகிறது. புகார்தாரர் கடந்த 15.05.2026 ம் தேதி காலை சுமார் 9 மணி அளவில் தானும், தனது மனைவி வள்ளியம்மாள் ஆகிய இருவரும் வீட்டை பூட்டிவிட்டு கடைக்கு சென்றுவிட்டோம் என்றும், தங்களை பார்ப்பதற்காக தனது மகன் கருப்பசாமி என்பவர் வீட்டிற்கு காலை சுமார் 11 மணி அளவில் வரும்பொழுது மேற்படி எதிரியானவர் தங்கள் வீட்டில் இருந்து வெளியே சென்றதை பார்த்துள்ளார் என்றும், பிறகு தங்களுக்கு தனது மகன் போன் செய்து உடனடியாக வர சொன்னார் என்றும், தானும், தனது மனைவியும் வீட்டிற்கு வந்து பார்த்த பொழுது வீட்டின் வாசலின் கதவு திறந்து கிடப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்து வீட்டின் உள்ளே சென்று பீரோவை பார்த்த பொழுது பீரோவில் வைத்திருந்த ரொக்கம் ரூ.9000/-த்தை காணவில்லை என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், மேலும், அரசு தரப்பில், இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், எதிரிக்கு இதே போன்று குற்ற எண்.564/2024 உள்ளது என்றும், மேலும் மீண்டும் இதே போன்று குற்றச்செயல் செய்யகூடும் என்றும், எனவே எதிரிக்கு பிணை கொடுக்க ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும், எதிரியை தற்போதுள்ள சூழ்நிலையில் பிணையில் விடுவித்தால் இதுபோன்ற குற்ற செயல்களில் தொடர்ந்து ஈடுபட வாய்ப்புள்ளது என்பதாலும், மேலும் மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்கினால் அது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இம்மனு மேற்சொன்னவாறு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் ஜீன் திங்கள் 4 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.02 08:10:48 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.